# நேரடி விசாரணை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வரின் முகவரித்துறை ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி!

இருக்க வேண்டும். தாமதங்களும் வீண் அலைக்கழிப்புகளும் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். மக்களும் அவர்கள் அளிக்கும் மனுக்களும் அலுவலகங்களில் மதிக்கப்பட்டு மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டால் தான் அரசு தன் கடமையை, பணியை முறையாக ஆற்றுவதாக கருதப்படும்.

காவல்துறையைப் பொறுத்தவரையில், பொதுவாக மனுக்களை ஆய்வு செய்ததில் பண மோசடி, குடும்ப பிரச்சினை, வாடகைதாரர் பிரச்சினை மற்றும் நில பிரச்சினை போன்றவையே அதிகம் இடம்பெற்றுள்ளன.

**காவல்துறையினரால் தவிர்க்கப்பட வேண்டியவை!**

மாவட்டங்களில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் (தலைமையிடம்) முதலமைச்சர் தனிப்பிரிவின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மனுக்கள் விபரங்கள் அமைச்சு பணியாளர்கள் / பிரிவு காவலர்களால் கையாளப்படுவதாகவே தெரிகிறது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

**உள்ளூர் காவல்நிலையங்களில் முறையாக விசாரிக்கப்பட வேண்டும்!**

உள்ளூர் காவல் நிலையங்களில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படாததாலேயே மக்கள் முதலமைச்சரின் தனிப்பிரிவை நாடி வருகின்றனர். பொதுமக்கள் உள்ளூர் காவல் நிலையங்களை அணுகும் போதே முறையாக மனு இரசீது கொடுக்கப்பட்டு விசாரணையில் முகாந்தரம் இருப்பின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் முகாந்தரம் இல்லையெனில் அவ்விபரத்தை மனுதாரருக்கு தெரிவிக்கப்படுமேயானால் அவர்கள் உயர் அதிகாரிகளையும் முதல்வரின் மனுக்கள் பிரிவையும் நாட வேண்டிய அவசியம் இருக்காது.

நீதிமன்றம் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும் என்ற பிரச்சினைகளுக்கு தக்க எழுத்துபூர்வமான அறிவுரையுடன் நீதிமன்றத்தை அணுக அறிவுறுத்த வேண்டும்.

பொருளாதார குற்றங்களால் தான் மக்கள் அதிகமாக பாதிக்கப்படுவதை அறிகிறேன். தற்போதுள்ள நடைமுறையில்

❖ மக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டதை உணர்ந்தபின் கொடுக்கப்படும் மனுக்களின் அடிப்படையில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

❖ இதனை தவிர்க்க கூடுதல் காவல் துறை இயக்குநர் பொருளாதார குற்றப்பிரிவின் கீழ் நுண்ணறிவு பிரிவு ஒன்றை தொடங்கி அதன் மூலம் ஒரு நிறுவனம் தொடங்கும் போதே முறையானது தானா என்பதை அறிந்து தொடக்கத்திலேயே நடவடிக்கை எடுக்கபட வேண்டும்.

❖மேலும், இதுபோன்ற நிறுவனங்களால் ஏமாற்றப்படுவதை தடுக்க மக்களுக்கு தொடர்ந்து தக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும்.

**நேரடி விசாரணை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுத்திடுக!**

சில காவல் அதிகாரிகள் குறிப்பிட்ட இடைவெளியில் முதல்வர் மனுக்கள் மேளா வைப்பதையும் கீழ்மட்ட விசாரணையில் திருப்தியில்லாதவர்கள் மனுக்கள் மாவட்ட/நகர காவல் அதிகாரிகளால் நேரடியாக விசாரணை செய்யப்பட்டு தீர்வு காண்பதை அறிகிறேன். இதே நடைமுறையை மற்ற அதிகாரிகளும் பின்பற்றி நடைமுறைபடுத்த வேண்டும்.

அதிக மனுக்களை முடிவு செய்வது அல்ல நம் நோக்கம். நியாயமான தீர்வுகளும் மக்கள் திருப்தியுமே இவ்வரசின் குறிக்கோள். இறுதியாக உதவி ஆய்வாளர்/ஆய்வாளர் மட்டத்தில் செய்யப்படும் முறையான நியாயமான விசாரணை மட்டுமே மக்களுக்கு அரசின் மீதான நம்பிக்கையை உறுதிபடுத்தும் என்பதை மனதில் கொண்டு காவல் துறை உயர் அதிகாரிகள் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு சார்பு நிலை அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

> **மக்களுக்கு சேவைகளை வழங்கும் அரசு அலுவலகங்கள் எல்லாம் மக்கள் எளிதில் அணுகி சேவைகளை பெறக்கூடிய ஒரு இடமாக இருக்க வேண்டும். தாமதங்களும் வீண் அலைக்கழிப்புகளும் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். மக்களும் அவர்கள் அளிக்கும் மனுக்களும் அலுவலகங்களில் மதிக்கப்பட்டு மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டால் தான் அரசு தன் கடமையை, பணியை முறையாக ஆற்றுவதாக கருதப்படும்.**

**தலைமைச் செயலாளர் - காவல் துறை தலைவர் ஆய்வு செய்ய வேண்டும்!**

எனவே தலைமைச் செயலாளர் மற்றும் காவல் துறை தலைவர் தங்களது மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களில் முதல்வரின் முகவரி துறை மனுக்கள் முறையாகவும் விரைவாகவும் தீர்வு காணப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல அனைத்து அரசுத் துறை செயலர்களும், துறை தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தங்கள் துறை மற்றும் மாவட்டங்களில் பெறப்படும் மனுக்களை கவனமாக ஆய்வு செய்து முறையாக தீர்வு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இப்பணியில் சிறப்பாக பணியாற்றிய அரசு செயலர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட அளவில், வட்ட அளவில் பணியாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும் என் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணியில் சற்று பின் தங்கியுள்ள சில துறைகளும் மாவட்டங்களும் தங்கள் பணியினை முடுக்கி விட்டு மக்கள் தேவையினை விரைந்து பூர்த்தி செய்வார்கள் என நம்புகிறேன். அதனை தலைமைச் செயலாளர் அவர்களும், காவல் துறை இயக்குநர் அவர்களும் உறுதி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தினார்.

---

# சட்டப்படியும் - மனசாட்சிப் படியும் செயலாற்றுங்கள்!

## குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்றவர்களை வாழ்த்தி முதல்வர் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி!

திட்டத்தில் ஒரு கோடி மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தர இருக்கிறோம்.

**சிக்கல் இல்லாமல் திட்டத்தைச் செயல்படுத்த திட்டம்!**

மகளிருக்கு பொருளாதார வலிமை ஏற்படுத்தும் திட்டமாக இதனை வடிவமைத்துள்ளோம். யாருக்கெல்லாம் இது கிடைக்கும் என்று கேட்டபோது, ‘யாருக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் அவசியத் தேவையோ அவர்களுக்கெல்லாம் கிடைக்கும்’ என்று நான் சொன்னேன். திட்டத்தை இப்போதே அறிவித்துவிட்டோம். செப்டம்பர் மாதம் 15ஆம் தேதிதான் வழங்கப் போகிறோம். இதற்கிடையே வருகின்ற அனைத்து ஆலோசனைகளையும் ஏற்று எந்தச் சிக்கலும் இல்லாமல் அதனைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். என்னுடைய முழு கவனம் என்பது இதில்தான் இப்போது இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு, மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தைக் கூட்டி, அவர்களிடம் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்துள்ளேன். அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மிகுந்த ஆர்வத்தோடு இதில் இறங்கிவிட்டார்கள். ஏனென்றால், ஒவ்வொரு மாவட்ட மக்களும் இதில் பயனடைய இருக்கிறார்கள்.

இத்தகைய துடிப்பும், ஆர்வமும் கொண்டவர்களாக நீங்களும் நீங்கள் பணியாற்றும் இடங்களில் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**படிப்பை நிறுத்தி விடாதீர்கள்! சமூகத்தைப் படியுங்கள்!**

உங்களை நாடி வரும் ஏழை எளிய மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது .

மக்களிடம் கனிவாகப் பழகுங்கள். அவர்கள்தான் நமக்கு உண்மையான மேலதிகாரிகள். அவர்களிடம்தான் நீங்கள் முதலில் நற்பெயர் எடுக்க வேண்டும். இதை நீங்கள் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**‘மனசாட்சி என்ன சொல்கிறது?’ என்றும் பாருங்கள்!**

நிறையப் படித்து, இந்தப் பதவியைக் கைப்பற்றி இருக்கிறீர்கள். இத்தோடு போதும் என்று படிப்பை நிறுத்தி விடாதீர்கள். இந்தச் சமூகத்தைப் பற்றிப் படியுங்கள். அதுதான் உங்களை மிகச் சரியாக வழிநடத்தும். உங்களது பயிற்சிக் காலத்தில், சட்ட விதிகள், நடைமுறைகள், அரசுத் திட்டங்கள், அவற்றிற்கான விதிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி எல்லாம் முழுமையாகத் தெரிந்து கொள்ளுங்கள். அதனை எந்த இடத்திலும், எந்தச் சூழலிலும் விட்டுத் தராமல் செயல்படுங்கள்.

**சட்டம் என்ன சொல்கிறது என்றும் பாருங்கள். உங்கள் மனசாட்சி என்ன சொல்கிறது என்பதையும் பாருங்கள். அதன்பிறகு செயல்படுங்கள்.**

அகில இந்திய தேர்வினைச் சிறப்பாக எதிர்கொண்ட நீங்கள், அடுத்து வரும் உங்களது பயிற்சிக் காலத்தையும் மிகச் சிறப்பாக நிறைவு செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**திட்டங்களை கண்காணித்து செயல்படுத்துங்கள்!**

பல்வேறு பணிகளில் பிற்காலங்களில் பொறுப்பேற்கப் போகும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

உங்கள் பணிகளால் நமது தமிழ்நாடும், உங்கள் குடும்பமும் பெருமைப்பட வேண்டும் என மீண்டும் ஒருமுறை வாழ்த்தி, என் உரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை (பொ) அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் வீட்டு வசதி வாரிய ஆலோசனை கூட்டம் கோயம்பேட்டில் உள்ள வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலகத்தில் 11.07.2023 அன்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா, வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், வாரிய நிதி ஆலோசகர் கோவிந்தராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வீட்டு வசதி வாரிய தலைமை வருவாய் அலுவலர் கோ.புண்ணியக்கோட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஃபர்கத் பேகம் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

---

### 2023-2024 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு கூட்டம்!

## குழுத் தலைவர் - அரசுக் கொறடா முனைவர் கோவி.செழியன் தலைமையில்!

*தஞ்சாவூர், ஜூலை 14-*

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர் / அரசு தலைமைக் கொறடா தலைமையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு 2023-2024ஆம் ஆண்டிற்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர் / அரசு தலைமை கொறடா முனைவர் கோ.வி.செழியன் தலைமையில் சட்டமன்ற பேரவை மனுக்கள்; குழு உறுப்பினர்கள் செ.சுந்தரராஜன், மு. பாபு, கே.பொன்னுசாமி, ஆர். ராதாகிருஷ்ணன்;, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலாளர் முனைவர். கி.சீனிவாசன், சட்டமன்ற பேரவை துணைச் செயலாளர் கோ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழு 2023-2024ஆம் ஆண்டிற்கான ஆய்வுக்கூட்டம் 12.7.2023 அன்று நடைபெற்றது.

ஆய்வின்போது தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர் / அரசு தலைமை கொறடா முனைவர் கோ.வி.செழியன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்ட அரங்கில் தமிழ்நாடு சட்டப்பேரவையின் 23-24 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவால் பெறப்பட்ட மனுக்களின் மீதான பதிலறிக்கை குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்காகவே. அதிலும் மக்களை தேடி அதன் பயன்கள் செல்ல வேண்டும் என்பதை ஆர்வம் கொண்டு ஏழை, எளிய ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு உயர்த்திட ஓயாது உழைத்திடும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனதார நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற மனுக்களின் குழுவானது மிக முக்கியம் வாய்ந்த குழுவாகும். சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுவானது பொதுமக்களின் பிரச்சினையை நேரடியாக ஆய்வு செய்து பொதுமக்களை நேரடியாக சந்தித்து பல்வேறுபிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒரு குழுவாக செயல்படுகிறது. அந்தவகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பொதுமக்களின் மீது பெறப்பட்ட மனுக்களின் அடிப்படையில் அறிக்கை பெறப்பட்டு இன்று தீர்வு செய்யப்பட்டு மனுக்கள் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் குழுவிடம் 494 மனுக்கள் அளிக்கப்பட்டது. அனைத்தும் மனுக்களும் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப் பட்டது.

அதில் 65 மனுக்கள் இன்று நேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இம்மாவட்டத்தினை சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள், அலுவலர்கள், மனுக்கள் மீது உரிய பதிலளித்தார்கள் என தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத்தலைவர் / அரசு தலைமை கொறடா முனைவர் கோ.வி.செழியன் தெரிவித்தார்.

முன்னதாக, முன்னதாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மாரியம்மன் கோயில் காடவராயன் குளம் மற்றும் வடிகால் வாய்க்காலில் செப்டிக் டேங்க் கழிவு நீரை பி.வி.சி குழாய் மூலம் இணைத்து நீர்நிலை மாசுபடுவதை தடுப்பதை குறித்தும், சமுத்திரம் ஏரியை ஆழப்படுத்தி மதகுகள் மற்றும் சருக்கைகள் கட்டிடம் மற்றும் சீரமைப்பது குறித்தும், நாஞ்சிக்கோட்டை குளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வாருவதை குறித்தும், அண்ணா நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதி மேம்படுத்துவது குறித்தும், தஞ்சாவூர் புதிய பேருந்து நிலைய கழிவறை வசதி குறித்தும், தேசிய நெடுஞ்சாலை 226 நீட்சியில் திருவையாறு புறவழிச்சாலை அமைக்கும் பணி குறித்தும், வேலூர் கிராமம் இலவச கழிப்பிடம் பழுது குறித்தும் மற்றும் தஞ்சை பெரிய கோயில் அகழி தூர்வாரி சுத்தப்படுத்தி பயன்பாட்டில் கொண்டு வருவது குறித்தும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் மனுக்கள் குழுத் தலைவர், சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு உறுப்பினர்கள், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலர், சட்டமன்ற பேரவை துணை செயலர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) எச்.எஸ்.ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஜி.செந்தில்குமாரி, தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஆர்.உஷா புண்ணிய மூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சாலை தவவளன் மற்றும் அனைத்து அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

# திருநெல்வேலி மாநகர அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் முடிவு!

## தலைமைக் கழக அறிவிப்பு

**‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரக் கழக அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேலு (எ) சுப்பையா மறைவெய்திய காரணத்தால்; திருநெல்வேலி மாநகர அவைத்தலைவர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2023 ஜூலை 12 (புதன்கிழமை) அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;**

**திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரக் கழக அவைத்தலைவர் பொறுப்புக்கு டாக்டர் ப.பொன்மணி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,**

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்,**

**திருநெல்வேலி மாநகரக் கழக அவைத் தலைவராக**

**டாக்டர் ப. பொன்மணி, எண்.9/10,சாமியார் தைக்கா தெரு, திருநெல்வேலி டவுண். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.07.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.